**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 255/2015** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வீரபெருமாள் | **வயது** | : | 73 |
| **த.பெ** | : | ராமசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | மொடையூர் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>18.11.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1)வழக்கில் 2 அட்டவணை சொத்துக்களை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1 அட்டவணை சொத்து தான் தாக்கல் செய்துள்ளேன். தாவாசொத்தும், இதர சொத்துக்களும் நானும் என் அண்ணன் ராமலிங்கம் அவர்களும் பாகபிரிவினை செய்துகொண்டு அதன்மூலம் எனக்கு வந்த பாக சொத்திற்கு தான் நான் **வா.சா.ஆ.4** பட்டா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி **வா.சா.ஆ.4** பட்டாவின் அடிப்படையில் தான் மேற்படி தாவா சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். என் வீட்டிற்கும் பிரதிவாதியின் வீட்டிற்கும் இடையே மண் சுவர் உள்ளதா என்றால் இல்லை. என் வீடு தட்டை ஒடு வீடு என்றால் சரிதான். மேற்படி வீட்டின் கிழக்கில் உள்ள சுவர் என்ன சுவர் என்றால் மண் சுவர்.

2)மண்சுவரில் இருந்து 4 அங்குலம் விட்டு வீடு பிரதிவாதி கட்டியுள்ளாரா என்றால் இல்லை. மண்சுவரை ஒட்டி கட்டி உள்ளாரா அல்லது தனிசுவர் எழுப்பி பிரதிவாதி வீட்டை கட்டியுள்ளாரா என்றால் தனிசுவர் எழுப்பி கட்டியுள்ளார். தற்போது நான் குடும்பம் இருக்கும் தட்டோடானது என் தந்தை கட்டிய வீடு என்றால் சரிதான். மண்சுவர் ஒட்டி நான் மேற்படி தட்டோடு கட்டியுள்ளேனா என்றால் ஒட்டிதான் கட்டியுள்ளேன். **வா.சா.ஆ.4** பட்டாவில் குறிப்பிட்டுள்ளபடி தான் சொத்து அமைந்துள்ளதா என்றால் சரிதான். என் வீடு தெற்கு மற்றும் வடக்கு பக்கம் இரவானம் உள்ளது என்றால் சரிதான். வீட்டு தகராறு எற்பட்ட பிறகு நான் சர்வேயர் வைத்து வீட்டை அளந்தேனா என்றால் இல்லை.

3)என் தந்தை காலத்திலிருந்து என் வீட்டை அளந்ததில்லை என்றால் இல்லை. வழக்கு தாக்கல் செய்தபிறகு நீதிமன்ற ஆணையர் வைத்து தாவா சொத்து அளக்கப்பட்டதா என்றால் அளக்கவில்லை. தாவா அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்களில் குறிப்பிட்டுள்ள சர்வே நெம்பர் வெவ்வேறானவை என்றால் இல்லை ஒரே சர்வே நெம்பர் தான். தாவா அ அட்டவணை சொத்து சர்வே எண் 416/11 சொத்தில் என் வீடு உள்ளது என்றால் சரிதான். அதேபோல் சர்வே நெம்பர் 416/12 மற்றும் 416/13 பிரதிவாதியின் சொத்து என்றால் அதுதான் தகராறில் உள்ளது. தாவா அ அட்டவணை சொத்துக்களுக்கு சக்குபந்தி என்னவென்றால் வீதிக்கு வடக்கு, கோவிந்தராஜ்

கவுண்டருக்கு தெற்கு, ராமலிங்கம் வீட்டிற்கு கிழக்கு, நடராஜன் வீட்டிற்கு மேற்கு ஆகும். நான் என் பிரமாண வாக்குமூலத்தில் 4ம் பத்தியில் என் அண்ணன் ராமலிங்கம் அவர்களுக்கு மேற்குபக்கத்தில் 9 அங்குலம் காலியிடம் விடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

4)மேற்படி 9 அங்குலத்தில் என் அண்ணன் வீடு கட்டியுள்ளாரா என்றால் வீடு கட்டியுள்ளார், இடைவெளி எதுவும் இல்லை. என்னுடைய பிரமாண வாக்கமூலத்தில் பத்தி 5 ல் குறிப்பிட்டுள்ள வரைபடத்தை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் தவறாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலம் பத்தி 7 ல் கூறியுள்ளேன் அதற்கு நான் ரீஜாயிண்டர் நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை என்றால் அனுப்பவில்லை. எனக்கு அளவீடுகள் சரியாக தெரியாததால் தான் மேற்படி அறிவிப்பை தவறாக அனுப்பினேன் என்றால் சரியல்ல. என் தந்தை வீடுகட்டி நான் தற்போது வரை அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.

5)அதேபோன்று பிரதிவாதியும் அவரின் தந்தை கூரைவீடாக கிரையம்பெற்று, அதை தட்டைவீடாக மாற்றி பிரதிவாதி கட்டிய பிறகு தற்போது அதை மெத்தைவீடாக கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் வீட்டில் தட்டோடு கூரை அளவு கிழக்கு பக்கத்தில் உள்ள மண் சுவற்றின் மீது முக்கால்அடி உட்கார்ந்து இருக்குமா என்றால் இருக்கும். மண்சுவரின் அகலம் 1 ½ அடி இருக்குமா என்றால் 1 ¼ அடி வரும். எனக்கு தாவா பி அட்டவணை சொத்து எதுவும் பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கூறும்படி மண்சுவற்றிக்கு கிழக்கில் பிரதிவாதி தனிசுவர் போட்டு மெத்தை வீடு கட்டிவிட்டார், மேலும் நான் கட்டிய வீட்டில் சுவற்றில் முக்கால் அடி தட்டோடு வைத்து கட்டியுள்ளேன் மீதி முக்கால் சுவர் காலியாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல.

6)மேலும் என் வீட்டின் இரவானம் வடக்கு தெற்கு என்றுதான் தண்ணீர் விழும், கிழக்கில் தண்ணீர் விழுவதாக நான் கூறுவது தவறு என்றால் சரியல்ல. ஆகையால் நான் கூறுவது எற்றுகொள்ளமுடியாது என்றால் சரியல்ல. எனது பட்டாவில் உள்ள அளவீடுகள் கம்மியாக உள்ளது என்று நான் என் முதன்மை விசாரணையில் கூறியுள்ளேன், அதில் நான் மாற்ற நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை, யுடிஆர் பட்டா 1983 ல் கொடுக்கப்பட்டது தவறாக கொடுக்கப்பட்டது. **வா.சா.ஆ-4** பட்டா கொடுக்கப்பட்டு சுமார் 40 வருடங்கள் ஆகிறது, இதுநாள் வரை அது தவறான பட்டா என்று அதன் மீது அதை ரத்துசெய்ய சொல்லி மனுகொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல.

7)நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ-1** ஆவணத்தில் தாவா சொத்து எந்த தெருவில் உள்ளது என்ற விவரம் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் நான் தாக்கல் செய்துள்ள வீட்டுவரி ரசீதுகளில் என்னவீடு என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மேலும் நான் தாக்கல் செய்துள்ள **வா.சா-ஆ.5** ரசீதுகளில் தாவா சொத்திற்கு உண்டான ரசீதுகள் என்றுதான் எதுவும் இல்லை என்றால் சரிதான். மேலும் நான் தாக்கல் செய்துள்ள **வா.சா.ஆ-6** மின்கட்டணரசீது **வா.சா.ஆ-7** மின்கட்டண ரசீது தாவா சொத்து வீட்டிற்கு உண்டானது என்று எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சர்வீஸ் நெம்பர் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாவா அ அட்டவணை சொத்திற்கு உரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை, தாவா ஆ அட்டவணை சொத்திற்கு

ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆகையால் என் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

8)உண்மையான வழக்காக இருந்திருந்தால் நான் சர்வேயர் வைத்து அளந்திருப்பேன், மேலும் இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையைரை நியமிக்க மனுதாக்கல் செய்திருப்பேன், மற்றும் பிரதிவாதியை அலைகழிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கில் தாக்கல செய்துள்ளதால் இந்த வழக்கு பிரதிவாதியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. ஆகையால் தான் பிரதிவாதியின் மெத்தை வீடு கட்டும்போது சென்று நான் தகராறு செய்ததால் தான் என்னை போலிசார் ரிமாண்ட் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விவரத்தை நான் என் முதன்மை விசாரணையில் பத்தி 6 ல் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER Digitally signed by SALMA BASEER Date: 2025.11.19 10:37:41 +0530

District Munsif,
Polur.